# LAABH SAMACHAR

Volume: 08 Issue : 02 MAY 2019 Tamil & English Monthly Price: Rs. 10/-



Individual Villas at **Madurai** for
***24 Lakhs****

* DTCP Approved 140 Villas Layout
* Located at Airport -Thirumangalam Ring Road
* 24 Hours Security
* Suitable for Retirement Homes
* Solar Powered Villas
* Drinking Water Connection
* 40' and 30' Roads
* 3 Times Food Served at Home^
* Temple at Site

Registration and Service Connection Charges Extra

Energy Livingscapes
Value . Fortune . Pride

**HEAD OFFICE :**
Plot No 264, LIG Colony,
Off Lake View Road , KK Nagar ,
Madurai - 625 020
Contact : 81108 11180
Email: info@energyls.co.in



சொல்வேந்தர்,
கலைமாமணி
**தா.கு. சுப்பிரமணியன் ஐயா**
அவர்களுக்கு
ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்
இதய அஞ்சலி

SITCON — Sourashtra Industrial Trade Conference — August 2,3 & 4 2019

# BROCHURE Launch

View the Brochure @ Page 13 - 16



Mrs. P.K. Punithavathi Mr. K.K. Dinakaran Mr. K.R. Sridhar Mr. P.R.S. Sivakumar Mr. K.V. Bala Mr. Kumaran B Jaghuva Mr. B.V. Ramesh Babu Mr. C.R. Venkatesh Mr. T.E. Yogesh Mr. T.S. Sarathi Mr. T.S. Sivaprakash

SITCON — Sourashtra Industrial Trade Conference — August 2,3 & 4 2019

| Venue | Trade Fair | Conference |
|---|---|---|
| Raja Muthaiah Mandram A/C Hall | 02, 03 & 04 Aug. 2019 | 03 & 04 Aug. 2019 |



SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343



TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles



J.M. Karthic Kumar
Cell: 99428 23335
99769 37016
LASER CARE
Printer Service
Toner Refill
TONER REFILL
1, Panthadi 1st street, 2nd floor,
(Near Thirumalai Naicker Mahal), Madurai-625 001.
E-mail: printerkarthic@gmail.com



AQUA DIAMOND RO
Sales & Service
All Company RO Water Purifier Service and exchange available
Thirukonda M. Vishnukumar
9524273727, 9524273728
Office @ Vandiyur, Madurai
email: vishnuaqua2737@gmail.com

## SOURASTRA CHAMBER OF COMMERCE BOARD OF MEMBERS 2017-2019

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Imm. Pt. President | 96552 34409 |
| **Office Bearers** | | |
| M.K. Kaladhar Babu | President | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Vice President | 99949 26348 |
| T.R. Mohanram | General Secretary | 93441 01432 |
| K.K. Dinesh | Treasurer | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K. Vijay Babu | Joint Secretary | 98942 10055 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| **E.C. Members** | | |
| T.K.D. Mohan | | 98430 52530 |
| J.S. Sayee Jeevan | | 90809 51577 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| P.M. Murali | | 94434 68476 |
| S.G. Srinivasan | | 91500 99456 |
| T.N. Suriyaprakash | | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | | 93443 04980 |
| S.K.B. Chandraprakash | | 98655 45048 |
| A.R. Ganesan | | 98421 75804 |
| B.S. Janaarthanan | | 97905 75650 |
| G.R. Subramanian | | 94427 52044 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| **Editorial Board** | | |
| J.S. Sayee Jeevan | Chairman | 95004 40811 |
| N.S. Prem Kumar | Member | 99944 35350 |
| K.S. Sivakumra | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

## நமஸ்கார்...

சிட்கான் மாநாட்டின் பிரவுச்சர் வெளியீட்டு விழா கடந்த மே 1–ம் தேதி வெகு விமரிசையாக நடந்தது. அங்கத்தினர்கள் மற்றும் சமூக பெரியோர்களின் பேராதரவு நடைபெற்ற நிகழ்வின் மூலம் அறிய முடிந்தது. சிட்கான் மாநாடு சிறப்பாக நடைபெறும் என்ற கூடுதல் நம்பிக்கையும் உத்வேகமும் உருவாகியுள்ளது. தங்களின் இந்த ஆதரவும் வாழ்த்தும் சேம்பர் உள்ள வரை தொடர வேண்டும் என்று விரும்புகிறேன்.

நமது சமூகத்தின் மற்றொரு அடையாளமாக விளங்கும் கலைமாமணி விருது பெற்ற, சொல்வேந்தர், பட்டிமன்ற பேச்சாளர், பேராசிரியர் **தா.கு. சுப்பிரமணியன்** அவர்களின் மறைவு ஸௌராஷ்ட்ர சமூகத்திற்கே பேரிழப்பு. அவரின் அழகான தமிழ் உச்சரிப்பின் மூலம் வெளியுலகிற்கு பிரபலமானார். மறைந்த திரையுலக பாடகர் பத்மஸ்ரீ டி.எம்.எஸ்., அவர்களுக்கு பிறகு நமது ஸௌராஷ்ட்ர சமுதாயம் **தா.கு.** அவர்களால் மீண்டும் இந்த உலகிற்கு அடையாளப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆன்மிகம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். தமிழ் பேசி தமிழுக்கு அழகு சேர்த்தவர்; நம் சமூகத்திற்கு பெருமை சேர்த்தவர், இன்று நம்முடன் இல்லை எனும்போது மனம் வேதனையுறுகிறது. நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்திய தொழில் சார்ந்த பல்வேறு பட்டிமன்றங்களுக்கு அவர் நடுவராக கலந்து கொண்டதை நினைவு கூறுகிறேன். அன்னாரது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் பேரிழப்பு. அவரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வேண்டுகிறது.

நன்றி — **- M.K. கலாதர் பாபு**

## திருக்குறள்

**எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்**

ஸௌராஷ்ட்ர மொழியில்: அப்³ப³ன் தகுனாவேள்அப்³பெ³தித்தே வேளுஸ்
கர்லனு ஸெக்னா கரன்

**பொருள்:** (காலங்கருதிக் காத்திருக்கும்போது) தான் குறித்துள்ள காலத்துக்கு முன்னால் எதிர்பாராதபடி இதைவிட அருமையான வாய்ப்புக் கிடைக்காதென்ற சமயம் கிடைத்துவிட்டால் பின்னால் அப்படிப்பட்ட வாய்ப்புக்கிடைக்காதென்பதற்காக அப்போதே குறித்த காரியத்தைச் செய்துவிட வேண்டும்.

அதிகாரம் 49 — காலம் அறிதல் (காரியம் செய்யத்தக்க காலத்தை அறிவது) — அரசியல்



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

12.04.2019 – சிட்கான் பிரவுச்சர் வெளியீட்டிற்காக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

15.04.2019 – திருநெல்வேலி மாவட்டம், வெள்ளங்குளி பகுதி வாழ் ஸௌராஷ்ட்ர சமூக சபா நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–க்கு வருகை தந்து சேம்பர் நிர்வாகிகளை சந்தித்து தொழில் வாய்ப்புகள் குறித்து பேசினர்.

21.04.2019 – பட்டிமன்ற பேச்சாளர் கலைமாமணி, **தா.கு. சுப்பிரமணியன்** அவர்களின் மறைவிற்கு சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

01.05.2019 – சிட்கான் 2019 மாநாட்டின் பிரவுச்சர் வெளியீட்டு விழா தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் மெப்கோ அரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக K.L.N. Memorial Polytechnic College செயலாளர் திரு. K.B. **ராதாகிருஷ்ணன்** அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் முதுநிலை தலைவர் திரு. பாலா வெங்கட குட்டி அவர்கள் பிரவுச்சரை வெளியிட்டார்.

05.05.2019 – கீதா நடன கோபால நாயகி மந்திரில் கலைமாமணி **தா.கு. சுப்பிரமணியன்** அவர்களின் இதயஞ்சலி நிகழ்ச்சிக்கு சேம்பர் கலந்து கொண்டது.

– T.R. **மோகன்ராம்**

**ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமியின் பாடல்கள் அர்த்தங்கள் (தமிழில்)**

**தே[2]வ் ஸோ மெனஸ்தெங்கோ**



பக்தியால் விபிஷணன், பாண்டவர் ஆகியோர் வாழ்ந்ததும், ராவணன், கௌரவர்கள் அவ்வாறு பக்தி செய்யாததால் மாண்டதும், பாருங்கள்! இவற்றை அறிந்து கொண்டு ஹரியைப் பாடுங்கள்! கருணை கிட்டும்! வெட்ட வெட்டத் தழைக்கும் முருங்கை மரம் போல நமக்குத் தீமைகளை மிகுதியும் கொடுக்கும் சாரமற்ற வார்த்தைகளை பேசுவதால் என்ன பயன்? பெரிய திருமந்திரத்தின் பொருளை உணர்வார்க்கே நன்மார்க்கம் கிட்டும். பக்தி இல்லாதவர்கள் பிறந்து இறந்து சுழல்வர். – தொடரும்



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

ஊர் கூடி தேர் இழுப்பது போல் சிட்கான் மாநாட்டை நாம் அனைவரும் சேர்ந்து மிகப்பெரிய வெற்றியடைய வைக்க வேண்டும். மாநாட்டில் மாபெரும் வர்த்தக கண்காட்சி நடைபெறவிருக்கிறது. வியாபார நிறுவனங்கள் ஸ்டால் முன்பதிவு செய்ய வேண்டுகிறேன். மேலும் மாநாட்டு மலர் மிகச் சிறப்பாக வரவிருக்கிறது. தங்கள் நிறுவனங்களின் விளம்பரங்களை கொடுக்க வேண்டுகிறேன். மாநாட்டில் நாடறிந்த பேச்சாளர்களின் நல்ல பல நிகழ்ச்சிகள் வணிகர் ஊக்குவிப்பு அரங்கங்கள் நல்ல முறையில் திட்டமிடப்படுகிறது. என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகத்தில் வெற்றிக் கொடி நாட்டியவர்கள் சிறந்த சாதனையாளர்கள் தங்களின் வெற்றி ரகசியத்தை மாநாட்டில் தெரிவிக்க இருக்கிறார்கள்.

எனவே நாம் அனைவரும் மகிப்பெரிய அளவில் கலந்து கொள்ள வேண்டுகிறேன். உலகத்தில் உள்ள நம் சமூகத்தின் அனைத்து வணிகர்களை இந்த மாநாட்டில் நீங்கள் காணலாம். தில்லி, மும்பை, பெங்களூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் முதலிய ஊர்களிலிருந்து வணிகர்கள் பங்குபெற இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டு வெற்றியானது நம் சேம்பரின் மிகப்பெரிய லட்சியமான சொந்த கட்டிடத்தை கட்டுவது என்கிற நம் குறிக்கோளை அடைய அடித்தளமாக இருக்கும் என்பது உறுதி.

திண்டுக்கல் மாநகரில் நம் சமூக வணிகர்கள் சேம்பர் ஆப் காமர்ஸ் தொடங்க சிறப்பான முறையில் ஆயத்த முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்கிற மகிழ்ச்சியான செய்தி வந்துள்ளது.

– J.S. **சாமீ ஜீவன்**





Shri. Bala V Kutti
Chairman
BVK GROUP OF COMPANIES
BVK FOUNDATION
BVK Foundation
Presents
6th ANNUAL
Sourashtrian
Achievers
Award
2018
AWARD CATEGORY
Best Student
Best Sport Person
Best Artist
Best Cultural Heritage Propagator
Outstanding Professional
Best Business Innovator
Best Educational Institution
Outstanding Woman Achiever
Best Social Worker
Outstanding NRI
Life Time Achievements Award
ஸௌராஷ்டிரா
சிறந்த மாணவர்
சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனை
சிறந்த கலைஞர்
சிறந்த கலாச்சார பாதுகாவலர் / அமைப்பு
தொழில் வியாபாரத்தில் புதுமை புகுத்தியவர்கள்
திறமையான துறை வல்லுநர்
சிறந்த கல்வி நிறுவனம்
சிறந்த சீர்மிகு பெண்மணி
சிறந்த சமூக சேவகர் / அமைப்பு
வெளிநாடு வாழ் இந்திய சாதனையாளர்
வாழ்நாள் சாதனையாளர்
Best Compliments from
BVK GROUP OF COMPANIES
Indowind Energy Ltd | Indus Finance Ltd
Everon Power Ltd | BeKae Props. P Ltd
Nomination are invited
from 2017-18 achiever's
awards@bvkgroup.com
Contact: Mr. S.R.Vidyasagar
9940085452
For more details please visit
www.bvkawards.com
BVK Foundation Kothari Building 4th Floor, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.

# சொல் வேந்தர் தா.கு. வின்...

## குறள் பயணம்...



பட்டிமன்ற பராங்குசன், கலைமாமணி, பேரா. தா.கு. சுப்பிரமணியன் அவர்கள் தமது 72வது வயதில் பகவத் திருவடியடைந்தார் (20.04.2019) அன்னாருக்கு சேம்பர் அஞ்சலி செலுத்துகிறது. ஸௌராஷ்டர சமூகத்தில் மிகவும் பேசப்படக்கூடிய, போற்றத்தக்கவர் திரு. தா.கு. சுப்பிரமணியன். அவரின் மறைவு நமது சமூக மக்களுக்கு பேரிழப்பு. ஒட்டுமொத்த ஸௌராஷ்டர சமூகமும் இன்று மீளாத்துயரத்தில் உள்ளது. அவரை குறித்த சில விபரங்களை கட்டுரையாக நமது அங்கத்தினர்களுக்காக வழங்கியுள்ளோம்.

ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகளின் கீர்த்தனைகளை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர் பேராசிரியர் தா.கு. சுப்பிரமணியன். இவர் 1970 சமயத்தில் சுவாமிகள் அவதரித்த மதுரை பால்மால் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் ஆலயத்தில்தான் முதல்முறையாக ஒரு வாரம் ராமாயண சொற்பொழிவு நிகழ்த்தினார்.

1978-ல் சேலம் ஸ்ரீ தத்தாத்ரேய ஸேவா ஸங்க மலரில் ஆழ்வார்கள் அடிச்சுவட்டில் ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகள் எனும் தலைப்பில் ஏழு பக்க அளவில் இவர் கட்டுரை எழுதியுள்ளார். 1985-90 சமயம் எட்டு பக்க அளவில் சுவாமிகள் பற்றி சிறு புத்தகம் எழுதினார். அதனை சென்னை லிப்கோ நிறுவனம் வெளியிட்டது.

பின் இவரின் Ph.D., ஆய்வு தொகுப்பு நூலான வாழ்வும் வாக்கும் 2001-ல் இவரது நண்பர் பேராசிரியர் T.R. தாமோதரன் பிரசுரித்து வெளியிட்டார். ஆக இவர் சொற்பொழிவு, எழுத்துப்பணி 1970 ஆம் ஆண்டில் தொடங்கியது. இவர் எழுதியதை விட பேசியதே அதிகம். இவர் தமிழ் பேச்சால் ஸமூகத்திற்கு பெருமை சேர்த்தது.

மதுரைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணியினை விட ஸமூக கூட்டங்களில் தானாகவே முன்னிலையாகி தனது பேச்சால் ஸமூகத்தினை பெருமைபடுத்தினார். தமிழில் மட்டுமல்ல தாய் மொழி சௌராஷ்டிரத்திலும் திருத்தமாக சொற்பொழிவு ஆற்றக்கூடியவர். தாய் மொழியில் பட்டிமன்றம் நடத்தும் அளவுக்கு தாய்மொழியினை உயர்த்திப் பிடித்தார். ஸமூகத்திற்கு பெருமை சேர்த்தார். இது தாய்மொழிப்பற்று / சமூகப்பற்று.

உலகப்புகழ் பட்டிமன்ற நடுவர் தமிழறிஞர் சாலமன் பாப்பையா குழுவில் இவரை தளபதி என வர்ணித்தார் ராஜா. கணக்குப்பிள்ளை மட்டுமல்ல இலக்கியத்தில் ஐயம் ஏற்படும்போது தெளிவுபடுத்துபவர் எனக்கூறுவார் பாப்பையா. மதுரை கம்பன் கழகத்தில் இணைச் செயலராக விளங்கி தமிழகமெங்கும் கம்பன் கழக கூட்டங்களில் கலந்து கொண்டவர். இது தமிழ்ப்பற்று / இலக்கியப்பற்று.

தன் கவர்ந்திழுக்கும் வெண்கலக்குறளில் தமிழ்ப்பாசுரங்களை சொல்லும் அழகு அருமை. அவர் பேசும் பேச்சை மக்கள் மகுடி முன் பாம்பை போல மயங்கிக் கேட்பர்

ஸ்ரீ நாயகி சுவாமிகள் சாகித்தியம் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற சமயம் ஸ்ரீ நாயகி ஞானவாரிதி விருது மதுரை கீதா நடன கோபால நாயகி மந்திர் இவருக்கு வழங்கியது. சமீபத்தில் மதுரை ஸ்ரீமத் வேங்கடரமண பாகவத ஸமாஜம் ஸௌராஷ்டர ஞான வாரிதி விருது வழங்கி கௌரவித்தது. சொல்லின் செல்வர், அருள் நெறி சொல் வேந்தர் என பட்டங்கள் பல பெற்றுள்ளார். சமீபத்தில் தமிழ்நாடு அரசாங்கம் கலைமாமணி பட்டம் வழங்கியது. முத்தாய்ப்பாக அமைந்துவிட்டது.

ஸமூகத்தில் சாதாரண தொண்டர் முதல் சமூகத் தலைவர்கள் வரை அனைவரிடமும் பேதமின்றி அன்புடன் பழகுவார். ஸமூக ஸ்தாபனங்கள் பலவற்றில் நிர்வாகப்பணிகளில் பங்கு கொண்டு செயல்பட்டுள்ளார். ஸமூகம், கல்வி, கலாச்சாரங்களில் சிறந்த விளங்க வேண்டும் என சிந்தித்து செயல்பட்டவர். இப்படி ஸமூகம், பொதுநலம், சொல், எழுத்து, மொழிப்பற்று என பல துறைகளில் சிறப்புற்று நமது ஸௌராஷ்டர சமூகத்தை உயர்த்திய மாபெரும் மனிதர் தா.கு. சுப்பிரமணயின் ஐயா அவர்களின் மறைவு ஸமூகத்திற்கு பேரிழப்பு. அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீமந் நாராயணனை இறைஞ்சுகிறது.

கடந்த 05.05.2019 அன்று கீதா நடன கோபால நாயகி மந்திர்-ல் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. ஸௌராஷ்டர சமூக ஸ்தாபனங்கள் அனைத்தும் இணைந்து நினைவஞ்சலி கூட்டத்தை நடத்தியது. இதில் ஸௌராஷ்டர சமூக முக்கிய பிரமுகர்கள், சமூக மக்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பட்மன்ற நடுவர் **சாலமன் பாப்பையா** அவர்கள், 47 ஆண்டுகள் பட்டிமன்றங்களுக்காக பல்வேறு ஊர்களுக்கு சென்று வந்ததை உருக்கத்துடன் கூறினார். தமிழ் இலக்கியங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததாகவும் தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை கொண்டிருந்ததாகவும் கூறினார். தொடக்க காலத்தில் வறுமையில் தன் தம்பிமார்களை நல்ல நிலைக்கு கொண்டுவர பாடுபட்டார் என நினைவு கூறினார். பேச்சாளர் **ராஜா, பாரதி பாஸ்கர்**, முன்னாள் வானொலி நிலைய இயக்குனர் **இளசை சுந்தரம்**, K.B. **ராதாகிருஷ்ணன்**, Er. S.S. **சரவணன்** M.L.A. சேம்பர் அனைத்து நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தினர்.

*- இதழ் குழு, உதவி - ஈரோடு கிருஷ்ணமாச்சாரி.*




# BROCHURE




சிடகான் மாநாட்டின் செயல்பாடுகள் பற்றி விளக்கும் பிரவுச்சர் (சிற்றேடு) வெளியீட்டு விழா கடந்த 01.05.2019 அன்று மாலை 6 மணி அளவில் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் மெப்கோ அரங்கில் வெகு விமரிசையாக நடத்தியது. இதில் தொழில் முன்னோடிகள், சமூக முக்கிய பிரமுகர்கள் மற்றும் சேம்பர் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் வருகை தந்த சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள், தொழில் முன்னோடிகளுக்கு சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் விழா மண்டபத்தின் முன் நின்று வருகை புரிவோரை பொன்னாடை அணிவித்து உரிய மரியாதையுடன் அவர்களின் இருக்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

விழா துவக்கத்தில், சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்களை மேடைக்கு அழைத்தார். பிறகு, இணைச் செயலாளர் திரு. T.K. **விஜய்பாபு** அவர்களின் இறை வணக்கத்துடன் விழா இனிதே துவங்கியது.

அரங்கம் நிறைந்து காணப்பட்ட இந்த விழாவிற்கு சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர் பாபு** அவர்கள் தலைமை தாங்கி விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் அன்புடன் வரவேற்று பேசினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக K.L.N. Memorial Polytechnic செயலாளர் திரு. K.B. **ராதாகிருஷ்ணன்** அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் முதுநிலைத்தலைவர் திரு. **பாலா வெங்கட் குட்டி** அவர்களும் கலந்து கொண்டார்.

சேம்பர் தலைவரின் வரவேற்பினை தொடர்ந்து, சிடகான் 2019 மாநாட்டின் சேர்மன் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் மாநாட்டின் செயல்பாடுகள் குறித்து சுருக்கமாக விளக்கினார்.

அதனை தொடர்ந்து, சிடகான் 2019 மாநாட்டு பிரவுச்சர் சேம்பர் முதுநிலைத்தலைவர் திரு. **பாலா வெங்கட் குட்டி** அவர்களின் கரங்களால் வெளியிடப்பட்டது. இதனை விழாவிற்கு அழைக்கப்பட்ட தொழில் முன்னோடிகள் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வினையடுத்து, சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. **பாலா வெங்கட் குட்டி** அவர்கள் இன்றைய தொழில் வாய்ப்புகள் குறித்து





சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223




பேசி விழா வெற்றி பெற வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அதனையடுத்து, விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஸ்டால் அமைப்பு குறித்து அதன் குழுத்தலைவர் திரு. B.S. **ஜனார்த்தனன்** அவர்களும், விழா மலர் குறித்து அதன் குழுத்தலைவர் திரு. J.S. **சாயி ஜீவன்** அவர்களும் விளக்கினர்.

பிறகு, சிட்கான் 2019 மாநாட்டின் சேர்மன் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் இம்மாநாட்டிற்காக பணியாற்ற இருக்கும் குழு உறுப்பினர்கள் அனைவரையும் விழாவில் அறிமுகம் செய்து அவர்களை உற்சாகப்படுத்தினார்.

இந்த உற்சாகத்துடன் சிட்கான் 2019 குழுவினருக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில் அந்த சமயத்தில் சமூக முக்கிய பிரமுகர்கள், தொழில் முன்னோடிகள் பலர் ஆர்வத்துடன் தாமாக முன் வந்து நன்கொடைகளை அளித்தும், ஸ்டால் பதிவுகளையும், மாநாடு மலரில் விளம்பரம் செய்யவும் விருப்பம் தெரிவித்தனர். அவர்களை நமது சேம்பர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தது.

இதனையடுத்து, சேம்பர் பொருளாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் சிறப்பு விருந்தினரை, அனைவரும் ஈர்க்கும் வகையில் மிக அழகாக அறிமுகப்படுத்தி பேச அழைத்தார்.

அதனையேற்ற திரு. K.B. **ராதாகிருஷ்ணன்** அவர்கள் இளைய தொழில் முனைவோர்களை உருவாக்கிட வேண்டும். மாணவர்கள் தொழில் துறையில் ஈடுபடுத்த சேம்பர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். அவருக்கு நமது சேம்பர் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசினை வழங்கியது.

சேம்பர் முன்னாள் தலைவர்கள், தொழில் முன்னோடிகள் பலர் சிட்கான் 2019 மாநாடு வெற்றி பெற வாழ்த்துக்களை தெரிவித்தனர். இறுதியாக சேம்பர் பொதுச் செயலாளர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது.



























# BOUT TRIP HOLIDAYS

## Contact K K Vignesh Babu - 8760066555

330, Anna Nagar 80 feet Main Road, 7th Floor, Madurai - 625020.

Singapore, Malaysia, Dubai, SriLanka, Europe, USA, Australia, New Zealand,South Africa, Cambodia & India.

Office: 0452-4959440 www.bouttrip.com Email:support@bouttrip.com

# SITCON'19 BROCHURE LAUNCH - PHOTO GALLERY




சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்

**SRB சில்க்ஸ்**

158, தெற்கு மாசி வீதி,
மதுரை – 1.
Ph : 2320536

100 ஆண்டுகள்
SRB சில்க்ஸ்
Since 1901
ஸ்தாபிதம் 1901

ஆடவர் மற்றும் பெண்களுக்கான
பிரத்யேக ஆடையகம்

**SRB பொட்டிக் BOUTIQUE**

158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர்,
மதுரை-20 போன் : 4961990

எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

அலோ! மிளோ!! ஹொாடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 2,3 & 4 2019



குமரன் B ஜகுவா

சிட்கான் 2019 மாநாட்டின் பிரவுச்சர் வெளியீட்டு விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு வருகை தந்த அனைத்து சேம்பர் அங்கத்தினர்கள், முக்கிய பிரமுகர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். பிரவுச்சர் வெளியீட்டு விழா அரங்கம் நிறைந்து காணப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. இதே ஆர்வத்துடன் ஆகஸ்ட மாதத்தில் நடைபெற இருக்கும் சிட்கான் மாநாட்டிலும் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

சிட்கான் மாநாடு வெற்றி பெற வேண்டி முக்கிய பிரமுகர்கள் பலர் தாங்களாக முன் வந்து நன்கொடை அளித்தது மிகவும் ஊக்கமளித்தது. இந்த உற்சாகத்துடன் அடுத்தகட்ட பணிகளை நமது சேம்பர் மேற்கொண்டு வருகிறது.

விழாவில் நன்கொடை மட்டுமல்லாது, ஸ்டால் மற்றும் விழா மலரில் விளம்பரங்கள் அளிக்கவும் பலர் முன் வந்தது மகிழ்ச்சியளிக்கிறது. தங்களின் இந்த ஆர்வத்தால் சேம்பர்-ன் சிட்கான் 2019 குழுவினர்கள் அனைவரும் உற்சாகமடைந்துள்ளனர். மேலும் தங்கள் சேவைகளை உற்சாகத்துடன் தொடர தங்களின் இந்த ஆர்வமும் ஆதரவும் இறுதிவரை வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது, சிட்கான் மாநாட்டிற்கு அடுத்த கட்ட நடவடிக்கையாக மாநாட்டில் இடம் பெற இருக்கும் தொழில் குறித்த கருத்தரங்குகள் மற்றும் அதற்கான பேச்சாளர்கள், தொழில் முன்னோடிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நிச்சயமாக அங்கத்தினர்களுக்கு பயனுள்ள வகையில் நிகழ்ச்சிகளாக இருக்கும். அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் தொழில் வளர்ச்சிக்கு இதில் கலந்து கொண்டு மாநாட்டை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.



## வெள்ளங்குளி ஸௌ. அமைப்பு நிர்வாகிகளுடன் சிறப்புக் கூட்டம்

திருநெல்வேலி மாவட்டம் வெள்ளங்குளி, வீரவநல்லூர் பகுதியில் வாழும் ஸௌராஷ்ட்ர சமூக அமைப்பு நிர்வாகிகள் **சங்கரநாராயணன். விக்னேஷ். திலகர்** மற்றம் உறுப்பினர்கள் பலர் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்க்கு கடந்த 15.04.2019 அன்று சேம்பர் நிர்வாகிகளை சந்தித்து பேசினர். தொழில் வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், சிட்கான் 2019 மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த கூட்டத்தை சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. M.R. **முரளிதரன்** அவர்கள் ஏற்பாடு செய்தார்.


பதிவு எண்: 16 / 2002 ☎ 0452-2679676

**மகாத்மா முதியோர் இல்லம்**

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

| M.S. சந்திரசேகர் | J.R. ரமேஷ் | B.J. மகேசுவர்லால் | T.R. குமரன் | M.R. பிரேம்குமார் |
|---|---|---|---|---|
| 98421-44555 | 97861-40570 | 93444-51607 | 94437-23337 | 93444-51605 |




CRYSLER
SANITARYWARE
www.crysler.in
designer & world class sanitary
CITRA
the wellness of water
VSB ENTERPRISES
320/4A, Vallanatha Puram,
Avaniyapuram By Pass Road, Madurai - 625 012.
E-mail : vsb.mdu@gmail.com
JFP. T.R.K.Baalajee Sai
88706 64984
PLASTIC PRODUCTS | SANITARY WARE | KITCHEN SINK | ALLIED BATH FITTINGS | BATH ACCESSORIES

# சிட்கான் மாநாடு ஒரு பார்வை



**முதல் சிட்கான் மாநாடு 2011-ல்** நடத்தப்பட்டது. இம்மாநாட்டை C.K.சே கர் அவர்கள் தலைவராகவும் துணைத் தலைவராக இருந்த திரு. E. R. குமரேசன் அவர்கள் தலைமையிலும் மிகச்சிறப்பாக நடத்தினர். இம்மாநாடு மதுரை இராஜா முத்தையா மன்றத்தில் 2011 ஏப்ரல் 23&24 ஆகிய இரண்டு நாட்களுக்கு கோலா கலமாக நடத்தப்பட்டது.

இதில் பிரபல தொழில் முன்னோடிகளான ஆச்சி மசாலா நிறுவனத் தலைவர் திரு. ஐசக் பதம்சிங், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் நிறுவனத் தலைவர் திரு. தனுஷ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தனர். இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் நம் சமூக குலத்தொழிலை காக்கும் வகையில் ஜவுளித்துறையில் உள்ளவர்களை அழைத்து க்ளஸ்டர் ஒன்றை உருவாக்குவதாகும். அத்துடன் உணவு மற்றும் அச்சுத்துறை சார்ந்த தொழில் பிரிவினர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

சிட்கான் 2011 மாநாட்டில் கருத்தரங்க நிகழ்ச்சிகளுக்கு சிறந்த ஆலோசகர்கள் வல்லுநர்கள் மற்றும் தொழில் முன்னோடிகளை அழைத்து வர சென்னை இட்காட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு S.R. நாகேஸ்வரன் அவர்கள் பெரும் உதவியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறந்த தொழில் முனைவோருக்கான சிட்கான் ஸ்டார் விருதும், சிறந்த தொழில் சாதனையாளருக்கான விருது BVK குரூப் ஆப் கம்பெனி சேர்மன் திரு. K.V.பாலா அவர்களுக்கு வழங்கப்பட்டது.



**இரண்டாவது சிட்கான் மாநாடு 2013-ல்** நடத்தப் பட்டது. இம்மாநாடு E.R.குமரேஷன் அவர்கள் தலைவராகவும் துணைத் தலைவர் திரு K. K. G. பிரபாகரன் அவர்கள் தலைமையில் இராஜா முத்தையா மன்றம் மற்றும் மடீட்சியா அரங்கத்தில் 2013 ஆக 9, 10, &11 ஆகிய 3 நாட்கள் விமரிசையாக நடத்தப் பட்டது.

இதில் முற்போக்கு சிந்தனையாளர் ஆடிட்டர் திரு. குருமூர்த்தி அவர்களும் தொழில் முன்னோடியான அஞ்சலி நல்லெண்ணை நிறுவனர் திரு. நடராஜர் அவர்களும் விஜய் டிவி புகழ் நீயா? நானா? கோபிநாத் மேலும் பல சமூக முக்கிய பிரமுகர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டின் நோக்கமானது இளைஞர்களிடையே குறைந்து வரும் தொழில் ஆர்வத்தை ஊக்குவிப்பதே அத்துடன் பல துறைகளில் கால் பதித்த நம்மவர்கள் எக்ஸ்போர்ட் துறையிலும் வர வேண்டும் என்றும், நாம் ஒரு சமூக மருத்துவக் கல்லூரியை துவக்குவது போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதோடு 85 ஸ்டால்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**மூன்றாவது சிட்கான் மாநாடு 2015**-ல் நடத்தப்பட்டது. K.K.G.பிரபாகரன் அவர்கள் தலைவராகவும் துணைத் தலைவர் S.K.R. ரமேஷ் அவர்கள் தலைமையிலும் லக்ஷ்மி சுந்தரம் மற்றும் T.S. ராஜம் அரங்கத்தில் ஜீலை 31, ஆகஸ்ட் 1, 2ம் தேதியில் மிகச்சிறப்பாக நடத்தினர். நம் சமூக வணிகர்கள் ஆன்லைன் வர்த்தகத்தில் எவ்வாறு இணைவது என்பதை பற்றிய பணிமனை மற்றும் கருத்தரங்குகள் அத்துடன் வசந்த் டிவி நிர்வாக இயக்குனர் திரு வசந்தகுமார் அவர்கள் நம் சமூகத்தைப்பற்றிய எழுச்சிமிகு பேச்சும் வணிகத்தில் பெரும் வெற்றி பெற்றவர்களின் சாதனை விளக்கங்கள், பெண்களுக்கான சிறப்பு போட்டி, கல்சுரல் புதையல் வேட்டை ஆகியவை நடத்தபட்டது



வியாபார விவாத மேடை, கேள்வி பதில்கள், சாலமன் பாப்பையா, தா.கு சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் பட்டி மன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகள். நம்மவர்களின் உணவுத் திருவிழா, பிரம்மாண்டமான ஸ்டால் களுடன் வர்த்தக கண்காட்சி, பிற மாநில மற்றும் மாவட்ட ஸௌராஷ்ட்ர சமூக பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர். நமது முன்னாள் தலைவர் திரு C.K. சேகர் அவர்களுக்கு உத்யோக சேவா ரத்னா விருது வழங்கப்பட்டது. ஸௌராஷ்ட்ர தொழில் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

**நான்காவது சிட்கான் மாநாடு 2017-ல்** S.K.R. ரமேஷ் அவர்கள் தலைவரகவும், M.K.கலாதர்பாபு அவர்கள் துணைத் தலைவராகவும் ஆகஸ்ட் 11, 12 & 13 ஆகிய தே தியில் வர்த்தக ஸ்டால்கள் செல்லம் சரஸ்வதி அரங்கிலும் தமிழ்நாடு வர்த்தக சங்கத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகளும் மிகச்சிறப்பாக நடத்தினர், பிரபல தொழிலதிபர் Dr.நல்லிகுப்புசாமி செட்டி அவர்கள் தொழில் முனைவோருக்கு உற்சாகமூட்டும் வகையில் உரையாற்றினார்,



பிரம்மாண்ட ஸ்டால்களுடன் வர்த்தக கண்காட்சி மற்றும் இந்த ஆண்டு பல்வே று துறைகளில் சேவை மற்றும் சாதனை புரிந்தவர்களுக்கு சிட்கான் மாநாட்டில் கௌரவப்படுத்தப்பட்டது. இவ்வாண்டு புதிய முயற்சியாக சிட்கான் மாநாட்டு மலர் சற்று வித்தியாசமாக (2018 ஆண்டு முழுவதும் பயன்படும்) டைரி வடிவில் வெளிவந்தது. நமது முன்னாள் தலைவர் E.R.குமரே ஷன் அவர்களுக்கு உத்யோக் சேவா ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

ஒவ்வொரு சிட்கான் மாநாட்டு நிறைவிலும் முத்தாய்ப்பாக அனைவரது மனதில் நிற்கும் வண்ணம் BVK பவுண்டேசன் சார்பில் பல்வேறு துறைகளில் சாதனையாளர்களுக்கு ஸௌராஷ்ட்ரியன் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது



அவோ! மிளோ!! ஹொராடோ!!!

# SITCON 2019

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

*A Business Conference with Seminars & Exhibition*

மாபெரும் வர்த்தக கண்காட்சி
மற்றும் வர்த்தக கருத்தரங்கம்

*Organised by*

SOURASHTRA CHAMBER OF COMMERCE
MADURAI

## EXHIBITION

2, 3 & 4 August 2019

அனுமதி இலவசம்

## CONFERENCE

3 & 4 August 2019

Registration Free

## BVK AWARDS

on 4-8-2019 at 6.00 pm

## Raja Muthiah Mandram

Opp. to Dist. Court Madurai

*Awareness for Organ Donation*

## RUN

on 03-08-2019, at 6.00 a.m.

FM Partner

98.3 FM RADIO MIRCHI





# EXHIBITION

Date : 2,3 & 4 August 2019
(Friday, Saturday & Sunday)
Time : 10.00 am to 8.00 pm

## Stall Layout




அனுமதி இலவசம்

## STALL TARIFF

| | | |
|---|---|---|
| **ECO Stall** 3.25' x 6.5' | ₹ 10,000 | 28 to 37 |
| **ECO Prime** 3.25' x 6.5' | ₹ 11,000 | 27 & 38 |
| **Superior Stall** 6.5' x 6.5 | ₹ 20,000 | 2-14, 16-25, 40-49, 52-62, 63-76 |
| **Prime Stall** 6.5' x 6.5 | ₹ 22,000 | 1, 15, 26, 39, 50, 51, 62 |
| **Corporate Stall** 15' x 20' | ₹ 70,000 | 77 - 80 |

## DISCOUNT

| | |
|---|---|
| **Member / Repeats** | 10% |
| **Early Bird Offer** (on or before June 30th) | 15% |

**Available Amenities**

Table - 1 Chairs - 2

Plug Point & Tube Light

Contact : Stall Committee Chairman
**B.S. Janaarthanan**
Mobile : 95433 15650

## SITCON 2019 - DONORS

| | |
|---|---|
| Platinum Donor | ₹ 2,00,000 |
| Diamond Donor | ₹ 1,00,000 |
| Golden Donor | ₹ 50,000 |
| Silver Donor | ₹ 25,000 |

*Donation Exempted*
U/S 80G (5) (VI) IT Act. 1961
Vide Order No. C.No. 464/28/07.08/
CIT-1 dt. 04.11.2009
*Donors are Eligible for Special Recognition and Privileges in SITCON 2019*

### Bank Details for Payment

*All payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*

*SOURASHTRA CHAMBER OF COMMERCE*

State Bank of India, City Branch, Madurai
A/c No. 30134805614
IFSCode No : SBIN0000988

Contact : Finance Committee Chairman
**K.K. Dinesh** Mobile :98421 16461

## Souvenir Advt. Tariff
(Fully Multi Colour)

| Page Detail | |
|---|---|
| Back 1st Wrapper Outer | ₹ 25,000 |
| Back 1st Wrapper Inner | ₹ 20,000 |
| Front 1st Wrapper Inner | ₹ 20,000 |
| Back 2nd Wrapper Outer 2 Nos | ₹ 15,000 |
| Back 2nd Wrapper Inner 2 Nos | ₹ 13,000 |
| Inner Full Page | ₹ 5,000 |
| Inner Half Page | ₹ 3,000 |
| Page Marker | ₹ 20,000 |

| Printing Detail | |
|---|---|
| Book Size | : 11" x 8.5" |
| Full Page Design Size | : 9" x 7" |
| Half Page Design Size | : 4.5" x 7" |
| Inner Art Paper | : 100 gsm |
| Wrapper Art Board | : 300 gsm |

GEO 98940 37794

Contact : Souvenir Committee Chairman
**J.S. Sayee Jeevan**
Mobile : 95004 40811
Email : sourashtra.chamber@gmail.com

## ஆகஸ்ட் 2, 3 & 4 தேதிகளில் நடைபெற இருக்கும் சிட்கான் - 2019 ல்

- உணவுத் திருவிழா.
- கலை நிகழ்ச்சிகள்.
- பிரம்மாண்டமான ஸ்டால்களுடன் வர்த்தகக் கண்காட்சி.
- பெண் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துதல்.
- வணிகத்தில் வெற்றி பெற்றவர்களின் உற்சாக மூட்டும் உரைகள்.
